சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) என்னுடைய அறையிலே வந்து பார்த்தீர்கள். நானும் விஷயத்தை உங்களிடம் சொல்லியிருக்கிறேன். திரும்பவும் எதற்கு எழுந்து நிற்கிறீர்கள்? உட்காருங்கள். செல்வி கே. பாலபாரதி, சொல்லுங்கள்.

முற்பகல் 10-10

(ஆ) துணைக் கேள்விகளுக்கு பிற உறுப்பினர்களையும் அனுமதிக்கக் கோருதல்

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினமும், இன்றையதினமும் கேள்வி நேரத்தில் நீங்கள் துணைக் கேள்விகளை அனுமதிப்பதே இல்லை. "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்ற பழமொழிக்கேற்ப, துணைக் கேள்விகள் இல்லாத கேள்வி நேரம் என்பது பயனுள்ளதாகவும் இல்லை, சுவையுள்ளதாகவும் இல்லை. ஆகவே, வரக்கூடிய காலங்களில் துணைக் கேள்விகளைத் தாங்கள் அனுமதிக்க முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் எங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தீர்களென்றால், நாங்களும் அதற்கெல்லாம் ஒத்துழைப்புக் கொடுப்போம். நீங்கள் எங்களுக்கு எதிரும் புதிருமாக இருந்தால், நான் என்னுடைய* power-*ஐக் காண்பித்துவிட்டு அடுத்த* subject-*க்குப் போய்க்கொண்டே இருப்பேன். அவ்வளவுதான். (குறுக்கீடு) அடுத்து, திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள். (குறுக்கீடு)*

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், திரு. வேல்முருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே உங்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய விதி 55-ன்படி, சட்டமன்றம் கூடுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்பே நாங்கள் நூற்றுக்கணக்கான கவன ஈர்ப்புத் தீர்மானங்களைத் தங்களுக்கு அளித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய*

2010 ஏப்ரல் 20] [திரு. சி. ஞானசேகரன்]

கவனத்தை ஈர்த்திருக்கிறோம். இப்பொழுது கிட்டத்தட்ட ஒரு மாதம் ஓடிவிட்டது. இன்னும் 17 வேலை நாட்கள்தான் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தினமும் சிறப்புக் கவன ஈர்ப்பு எடுத்துக் கொண்டிருக்கிறோம். எல்லாம் ஒழுங்காக வரும். நீங்கள் எனக்கு direction கொடுக்காதீர்கள், உட்காருங்கள்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

நூல் விலை உயர்வு காரணமாக தறித் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நூல் விலை உயர்வு காரணமாக (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். விசைத்தறி மற்றும் கைத்தறித் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. செ.ம. வேலுசாமி, திரு. வி.பி. கலைராஜன், திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. செ. பொன்னுதுரை, திரு. பி. தங்கமணி, திரு. ஆர். சின்னசாமி, திரு. செ. தாமோதரன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. அருள் அன்பரசு, திரு. விடியல் எஸ். சேகர், திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. தி. வேல்முருகன், டாக்டர் க. நெடுஞ்செழியன், திரு. கே.எல். இளவழகன், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக திரு. சி. கோவிந்தசாமி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திருமதி பி. பத்மாவதி, திரு. சு. குணசேகரன், திரு. தி. இராமசாமி, திரு. எஸ். இராசசேகரன், திரு. கே. உலகநாதன், ம.தி.மு.க சார்பாக டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ், திரு. ரா. வரதராஜன் ஆகியோர் விதிகள் 55 மற்றும் 56-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளவர்கள், கட்சிக்கு ஒருவர் என்கிற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். அ.இ.அ.தி.மு.க. சார்பாக திரு. செ.ம. வேலுசாமி, சுருக்கமாகப் பேச வேண்டும்.